[1984 மார்ச் 8

கோபியில் உள்ள பவானி குடிநீர்த் திட்டம்.

219— (*வினா எண் 12024)—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபியில் உள்ள பவானிகுடிநீர்த் திட்டம் எப்போது செயலுக்கு வரும்?

(ஆ) எத்தனை கோடி திட்டத்திற்குச் செலவு செய்யப் படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) கோபிசெட்டி பாளையம் குடிநீர் விநியோக மேம்பாட்டுத் திட்டம் 1984ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

(ஆ) இத் திட்டத்திற்கு ரூ. 96.55 இலட்சம் செலவு பிடிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டுவருவதாக ஏற்கெனவே, சென்ற ஆண்டே சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளிடமிருந்து தீர் மானங்கள் வாங்கப்பட்டு அது செயல்பாட்டுக்கு வருமென, 1983ஆம் ஆண்டு முடிவில் வரும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் இப்போது அமைச்சர் அவர்கள் 1984 இறுதிக்குள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்த ஆண்டாவது இந்தத் திட்டத்தினால் முறையான பலன் ஏற்படுமா அல்லது மீண்டும் நீண்டு கொண்டே போகுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1982ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் செயல்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. தற்சமயம் பணிமானக் குழாய்களை மாற்றி யமைக்கும் பணியில் மொத்தமுள்ள 15.8 கிலோ மீட்டர் நீளத்தில், 14.4 கிலோ மீட்டர் வரை முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 3 பகுதிகளில் 3 நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றில் ஒன்று கட்டி முடிக்கப் பட்டு விட்டது. மற்ற வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தத் திட்ட மதிப்பீடு 96.55 இலட்சமாக இருந்தது; இப்போது ரூ. 133 இலட்சமாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

திரு தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் செயல்பாட்டுக்கு வருகின்றபோது, கோபி ஒன்றியம், ஊத்துக்குளி ஒன்றியம், பெருந்துறை ஒன்றியம் ஆகிய மூன்று ஒன்றியங்களிலும் செயல்பாட்டுக்கு வருமா? பிற ஒன்றியங்களிலும் செயல்பாட்டுக்கு வருமா என்று அறிய விரும்புகிறேன்?

1984 மார்ச் 8]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற போது, அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன என்பதை அறிவிக்க வில்லை. அதே போல், இதனால் எத்தனை கிராமங்கள் பயனடையும் என்பதையும் சொல்லவில்லை. அந்த விவரங் களைச் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவதாகச் சொன்ன கேள்வி சரி. எத்தனை கிராமங்கள் பயனடையும் என்று நான் சொல்லவில்லை. ஆனால், மதிப்பீட்டுத்தொகை ரூ. 96.55 இலட்சமாக இருந்தது. திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ. 133 இலட்சம் என்று சொன்னேன்.

கோவை மாநகரத்துக்கான சிறுவாணி குடிநீர்த் திட்டம்.

220—(*வினா எண் 12186) திரு. கு. ரமணி, மற்றும் திரு. மா. சின்ராசு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரத்துக்கான சிறுவாணி குடிநீர்த் திட்ட வேலை தற்போது எவ்வளவு முன்னேற்றமடைந்துள்ளது ?

(ஆ) அணை கட்டும் வேலை இரண்டாவது கட்டம் முடிந்து மூன்றாவது கட்டம் எப்பொழுது ஆரம்பமாகும் ?

(இ) தற்போது கோவை மாநகர மக்களுக்குத் தலைக்கு எவ்வளவு குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) திட்டமிடப் பட்டுள்ள 9 நீர்த்தேக்கத் தொட்டிகள் அனைத்திலும் கட்டிட வேலைகள் முடிவு பெற்று 7 நீர்த்தேக்கத் தொட்டிகள் செயல் படத் தொடங்கிவிட்டன. மீதி உள்ள நீர்த் தொட்டிகளும் 1984 மே மாதத்தில் செயல்படத் தொடங்கும் என எதிர்ப் பார்க்கப்படுகிறது.

(ஆ) அணை தற்பொழுது 868 மீட்டரிலிருந்து 878.5 மீட்டர் வரை உயர்த்தப்பட்டு மதகுகளுக்கு இடையில் பாலம் கட்டும் பணி நடந்து வருகிறது.

(இ) ஒரு நாளைக்கு நபர் ஒன்றுக்கு சுமார் 113 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS